## திராவிட இயக்க இதழ்கள் - 'பாரதிதாசன் குயில்'



பாவேந்தர் பாரதிதாசன், 1946-ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 1961-ஆம் ஆண்டு பிப்ரவரி வரை நடத்திய கிழமை இதழ் 'குயில்'. இது புதுச்சேரியிலிருந்து வெளிவந்தது. அவருக்குப் பிறகு அவரது மகன் மன்னர்மன்னன் நடத்திய இதழ்தான் 'பாரதிதாசன் குயில்'. இது 1967-ஆம் ஆண்டு மே மாதம் முதல் புதுவையிலிருந்து வெளிவந்தது. இது இலக்கிய திங்கள் இதழாக மலர்ந்தது.

அட்டையின் முகப்பில், பாவேந்தரின் படமும், 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்ற வரிகளும் இடம்பிடித்திருந்தன. முகப்பிலேயே 'உள்ளுறை' என்ற தலைப்பில், இதழின் உள்ளடக்கத்தையும் பட்டியலிடும் வழக்கம் இருந்துள்ளது.

"தூக்கத்தில் பிதற்ற நேர்ந்தால்
தூய்தமிழ் பிதற்றும் என்வாய்
ஆக்கத்தை எனக்கிந் நாட்டார்
அளித்திட்ட அறிவை எல்லாம்
தேக்கியென் தமிழ்மேன்மைக்கே
செலவிடக் கடமைப்பட்டேன்."

பாவேந்தரின் இச்சூளுரையே 'குயில்' இதழின் லட்சியம் என்பதைக் கூறி, தமிழ் அன்பரின் திரண்ட ஆதரவை வேண்டி நிற்கின்றோம்!" என்று இரண்டாம் இதழின் முகப்பு அட்டையில் ஆசிரியர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இந்த இதழில் பாவேந்தரின் படைப்புகளையும், அவரது பரம்பரையில் வந்த இளங்கவிஞர்களின் படைப்புகளையும் வெளியிட்டு, திராவிட இயக்க இலக்கியத்துக்குப் பெரும் பங்காற்றியுள்ளது.

## :ப்ளாஷ்பேக்



### சிறந்த இளைஞர் அணி அமைப்பாளர்!



சாயல்குடி பி.இ.இராமர்

1994-ஆம் ஆண்டு மதுரையில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில், நடைபெற்ற இளைஞர் அணி மண்டல மாநாட்டில், சிறந்த மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளருக்கான பரிசை, அன்றைய இராமநாதபுரம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான் பெற்றேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் இந்த விருது பெற்றதை எண்ணி மகிழ்கிறேன். உடன் பொதுச் செயலாளர் பேராசிரியர் க.அன்பழகன், அண்ணன் முரசொலி மாறன், அண்ணன் ஆற்காட்டார் மற்றும் கழக இளைஞர் அணித் துணை செயலாளர் பாசமிகு அண்ணன் அன்பில் பொய்யாமொழி ஆகியோர் உள்ளனர்.

**- சாயல்குடி பி.இ.இராமர்,**
**கழக வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மானுட சுதந்திர சாசனம்!

1921-ஆம் ஆண்டில் நீதிக்கட்சி உறுப்பினர் ஓ.தணிகாசலம் சென்னை மாகாண சட்டப்பேரவையில் வகுப்புரிமையை வலியுறுத்தி, ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இதன் தொடர்ச்சியாக, அதே ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பனகல் அரசர் கம்யூனல் ஜி.ஓ.-வை வெளியிட்டார். ஆனால், 1928-ஆம் ஆண்டு டிசம்பர் 15-ஆம் தேதி சுப்பராயன் அமைச்சரவையில் முத்தையா முதலியார் வெளியிட்ட வகுப்புவாரி ஆணையே நடைமுறைக்கு வந்தது. 'இது ஒரு மானுட சுதந்திர சாசனம்' என அறிஞர் அண்ணா புகழ்ந்தார். 'முத்தையா முதலியார் வாழ்க வாழ்க' என 'குடிஅரசு' ஏட்டில் தந்தை பெரியாரும் பாராட்டினார்.

# மாநாடு

ர.பிரகாசு **40**

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...


# பார்ப்பனிய மேலாதிக்கம் தகர்ந்தது!

*தென்னக ரயில்வே மண்டலம் 1951-ஆம் ஆண்டில்தான் அமைக்கப்பட்டது. அதற்கு முன்புவரை எஸ்.ஐ.ஆர்., எம்.எஸ்.எம். என்ற தனியார் நிறுவனங்களாகவே ரயில்வே இயங்கியது. அச்சமயத்தில் ரயில்வே சிற்றுண்டிகளில் பார்ப்பனர்களுக்கும், பார்ப்பனரல்லாதாருக்கும் தனித்தனி உணவு உண்ணும் இடங்கள் இருந்தன. இவ்வேற்றுமையை ஒழிக்காவிட்டால், போராட்டம் நடத்தப்படுமென்று 1941-இல் பெரியார் எச்சரித்தார். இதையடுத்து எம்.எஸ்.எம். ரயில்வே விடுதி, பிப்ரவரிலேயே பாகுபாட்டைக் கைவிட்டது. 'எம்.எஸ்.எம். ரயில்வே ஓட்டலில் ஜாதித் தீண்டாமை ஒழிந்தது. எஸ்.ஐ.ஆர். ரயில்வே ஓட்டலில் ஜாதித் தீண்டாமை ஒழிவது எப்போது?' என்று விடுதலையில் தினம்தோறும் கேள்வி எழுப்பினார் பெரியார். நீதிக்கட்சி சார்பாக போராட்டம் நடைபெற்றதையடுத்து, மார்ச்சில் எஸ்.ஐ.ஆர். ரயில்வே ஓட்டலிலும் பாகுபாடு ஒழிந்தது.*

*சாதி இழிவு ஒழிந்ததை, தமிழ்நாடெங்கும் கொண்டாடினர். சேலத்தில் நடைபெற்ற விழாவில், பெரியாரும் அண்ணாவும் பங்கேற்றனர். இந்த வெற்றியின் உத்வேகம் அம்மாத இறுதியில் நடைபெற்ற நீதிக்கட்சியின் கரூர் தாலூகா மாநாட்டிலும் எதிரொலித்தது. 23.03.1941 அன்று காலையில் நடைபெற்ற பேரணியில் ஜஸ்டிஸ் கொடி ஏந்திய தொண்டர் ஒரு குதிரை மீதும், முஸ்லிம் லீக் கொடி ஏந்திய தொண்டர் மற்றொர் குதிரை மீதும் அமர்ந்தவாறு முன்னே சென்றனர். பெரியார், அண்ணா உள்ளிட்ட தலைவர்கள் பின்னே மோட்டாரில் தொண்டர் படை சூழ வந்தனர்.*

**புகைவண்டி நிலையங்களில் சாதிப் பாகுபாடு ஒழிக்கப்பட்டதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகிழ்ச்சி தெரிவித்து மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

ஓவியம் : சிகரன்




*ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருந்த மைதானத்தில், சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் பந்தலில் மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் பொதுச் செயலாளராக கரூர் இரத்தினமும், வரவேற்புச் செயலாளராக எஸ்.காளியண்ண கவுண்டரும் செயல்பட்டனர். சாமி சிதம்பரனார் மாநாட்டைத் திறந்து வைக்க, சி.ஜெ.நெட்டோ கொடி ஏற்றினார். 'திராவிட நாட்டுப் பிரிவினை' படத்தை பெரியார் திறந்துவைத்தார். பெரியார் படத்தை சேலம் சித்தய்யனும், ஜின்னா படத்தை திருப்பூர் மொய்தீனும், சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் படத்தை அண்ணாவும் திறந்துவைத்தனர்.*

*"நமது தலைவர் பெரியார் வகுத்து, தொண்டாற்றி வரும் வேலைத்திட்டங்களை நாம் அறிவோம். சமுதாயத்தில் நிலவும் இழிவுகளைப் போக்குவதும், திராவிட நாடு திராவிடருக்கே என்ற இலக்கை அடைவதும்தான் அவற்றில் முதன்மையானது" என்று வரவேற்புரை யிலேயே நீதிக்கட்சியின் நோக்கங்களை விளக்கினார், எஸ்.காளியண்ண கவுண்டர். தலைமையுரையாற்றிய ராவ் பகதூர் சாமியப்ப முதலியார், "திருவாரூர் மகா நாட்டில், 'திராவிட நாட்டுப் பிரிவினைத் தீர்மானம்' நிறைவேற்றப்பட்டபோது, அது எனக்கு அவ்வளவு பிடித்தமில்லாதிருந்தது. ஆனால், நான் வடநாட்டுக்குப் போய்வந்த பிறகும், விஷயங்களை விளங்கிக்கொண்ட பிறகும் திராவிட நாட்டுப் பிரிவினை அவசியம் என்ற தீர்மானத்திற்கு வந்ததோடு, இந்த விஷயத்தில், பெரியாருக்கு பக்கத் துணையாக இருப்பது என்ற முடிவுக்கு வந்தேன்" என்று உணர்ச்சிபொங்க பேசினார்.*

*மாநாட்டில் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, முதல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. புகைவண்டி நிலையங்களில் சாதிப் பாகுபாடு ஒழிக்கப்பட்டதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகிழ்ச்சி தெரிவித்து மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதேபோல பார்ப்பனர்கள் நடத்தும் உணவு விடுதிகளில் உள்ள வேறுபாட்டைக் கிளர்ச்சி தொடங்கும் முன்பே, தாங்களே ஒழித்துவிடுவார்கள் என்று எதிர்பார்ப்பதாக எச்சரிக்கை விடும் விதமாகவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கரூர் உயர்தரப் பாடசாலை விடுதியில் பார்ப்பனரல்லாதாருக்கு சாதிப் பாகுபாட்டுடன் உணவு அளிப்பதற்கு கண்டனம் தெரிவித்தும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொது உரிமைக்கு வித்திட்ட இத்தீர்மானங்களால் பார்ப்பனிய மேலாதிக்கம் மெல்லத் தகர்ந்தது.*

**...கூட்டம் திரளும்**

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் **40**

"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

# அனைவருக்குமான ஆட்சியும் வளர்ச்சியும்...

*மனித வளக் குறியீடுகள், கல்வி, மருத்துவம், தொழில் வளர்ச்சி, விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும் முன்னிலை வகிக்கிறது, நம் தமிழ்நாடு. இந்த மாற்றம் என்பது கடந்த 50 ஆண்டுகால திராவிட ஆட்சியில் நடைபெற்றது. அதுவும் அதிவிரைவான, அதேவேளையில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியாக இது இருக்கிறது.*

**குறைகளைச் சரிசெய்து, ஆக்கப்பூர்வமான விமர்சனங்களுக்குச் செவி கொடுத்து அனைவருக்குமான வளர்ச்சியை, திராவிட இயக்கம் கண்டெடுத்துப் பயணிக்கும்.**

*அந்த வகையில், ஆண்டாண்டு காலமாக ஆரியம் கட்டமைத்த அனைத்து பொய்ப் புரட்டுகளையும் சூரிய நெருப்பைப் போல் சுட்டுப் பொசுக்குகிறது பொருளாதார அறிஞர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் தொகுத்த 'திராவிட ஆட்சி - மாற்றமும் வளர்ச்சியும்' என்ற நூல். 'திராவிடத்தால் வீழ்ந்தோம்...' என்று அறிவிலித்தனமாகப் பேசிக் கொண்டிருக்கும் அனைவருக்கும் ஆதாரங்களை அள்ளித் தெளித்துப் பதில் சொல்லும் புத்தகமாக இந்நூல் திகழ்கிறது. 12 ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கிய இந்நூலை, 'கயல் கவின்' பதிப்பகம் வெளியிட்டது.*




*சுயமரியாதைக்கான நெடும் பயணத்தில் நாம் அடைந்துள்ள வளர்ச்சி அளப்பரியது என்பதை, புத்தகம் உணர்த்துகிறது. 'குஜராத் மாடல்' என்ற பிம்பமும், 'மேற்கு வங்க மாடலின் தகுதி'யும், இந்நூலில் கேள்விக்குட்படுத்தப் பட்டுள்ளன. மேலும் நிலச் சீர்திருத்தம் பற்றிய கட்டுரைகள் அதிகாரப் பகிர்வின் அச்சாணியை அடையாளம் காண்கின்றன.*

*'கொங்குநாடு முன்னேற்றக் கழகம்' என்ற கட்சியின் தோற்றம் மற்றும் வளர்ச்சியின் காரணிகளை ஒரு ஆய்வுக்கட்டுரை மூலம் விளக்குகிறது, இந்தக் கட்டுரை சாதிய அணித் திரட்டல்களின் நோக்கத்தைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கிறது. மேலும், மருத்துவம் சார்ந்த கட்டுரைகள் நீட் பற்றியும், இலக்கு நோக்கிய காப்பீட்டுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகள் பற்றியும் தெளிவாகப் பேசுகின்றன.*

*இதில் உள்ள பிற கட்டுரைகளும் திராவிட ஆட்சியின் திட்டங்களைப் பற்றியும், நாம் அடைந்த முன்னேற்றம் பற்றியும், ஆதாரங்களுடன் விரிவாகப் பேசுகின்றன. இதிலுள்ள செய்திகளும் தரவுகளும் பல பொய்யர்களைத் தோல் உரிக்க, நிச்சயம் பயன்படும்.*

*'திராவிட மாடல்' என்பது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மட்டுமன்று, வளர்ச்சிக்கான உந்துதலை மக்களிடம் கொண்டு சேர்க்கும் மாடலும் கூட. அதன் விளைவுதான் நமது தமிழ்நாட்டுச் சமூக விழைவுச் சமூக'மாக (Aspirational Society) மாறியுள்ளது.*

*வளர்ச்சியைப் பரவலாக்கும் வலுவான நிதி வளங்களைக் கையில் வைத்திருக்கும் ஒன்றிய அரசு, ஒன்றும் செய்யாத சூழலில் தமிழ்நாடு எப்படி தனது வளர்ச்சியில் அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது, என்பதை இந்நூல் சுட்டிக் காட்டுகிறது.*

*சுயமரியாதைக்கான நெடும் பயணத்தில் நாம் அடைய வேண்டிய இலக்குகள், ஏராளம் உள்ளன. 'அனைவரையும் உள்ளடக்கிய திராவிடம்' என்கிற தத்துவத்தால், அந்த இலக்கை நிச்சயம் அடைய முடியும் என்பதை, இந்நூல் கூறும் செய்தியாகக் கொள்ளலாம். மேலும், இந்த இயக்கத்தின் வரலாறு, அந்த உறுதியை நமக்கு வழங்கியுள்ளது. இந்தப் புத்தகத்தை வாசிப்பவருக்கு அந்த நம்பிக்கை நிச்சயம் ஏற்படும்.*


*குறைகளைச் சரிசெய்து, ஆக்கப்பூர்வமான விமர்சனங்களுக்குச் செவி கொடுத்து அனைவருக்குமான வளர்ச்சியை, திராவிட இயக்கம் கண்டெடுத்துப் பயணிக்கும்.*

**...வாசிப்போம்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

678

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131